Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 ] of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப் பிரதி விலை: சதம் 10.

[புத்-எ௪] யாழ்ப்பாணம்:- சுபகிருது௵ பங்குனி மீ ௧௫உ வெள்ளிக்கிழமை (29 March. 1963) [இல-௫௧]

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபக தினம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

"சிங்கள அரசில் சோனக் கல்வி அமைச்சில் கிறிஸ்தவரான ஒரு கொமிஷனர் முன்னிலையில் ஏகான்மவாதம் எனப்படும் மாயாவாத உடன்பாடு பெற்றுச் சைவசித்தாந்தத்துக்குப் பாடத்திட்டம் வகுக்கவேண்டிய தொரு தலைவிதி, சைவம் வளர்த்த நாவலர் பிறந்த நாட்டில் நேர்ந்திருக்கிறது" என்று அன்பர் ஒருவர் சொல்லி மன வருத்தமுற்றார். அவர் ஒரு சீர்திருத்தக்காரர்; கூட்டங்கள் சபைகள் சங்கங்கள் என்பவைகளிற் பங்குபற்றிச் சீர்திருத்தம் வருவிக்கலாம் என்ற நம்பிக்கையுள்ளவர்; அப்படியான நம்பிக்கையை என்பாலும் வருவிக்க முயல்பவர்; என்னைக் கடிபவர். அவருக்கும் உடனிருந்தவர்களுக்கும் பாரதத்தில் வருவதொரு கதையை நான் சொன்னேன் அந்தக் கதை இது:

பாண்டு அரசன் முனிவர் ஒருவரின் சாபத்தால் வானப் பிரஸ்தனுய்க் காட்டில் தவஞ்செய்து கொண்டிருக்கிறான். அவனுக்கு மனைவியர் இருவர். அவர்கள் வயிற்றிலுதித்தவர்கள் ஐவர், பாண்டவர்கள். அவர்களும் காட்டில் முனிவர்கள் மத்தியில் வசிக்கின்றார்கள். முனிவர்களின் வாழ்க்கை பாண்டவர்களைப் புண்ணியர்களாய் வளரச் செய்கின்றது. தரும புத்திரருக்கு வயசு பதினறு ஆகப்போகின்றது. நகரத்திலே திருதராட்டிரனுக்குப் புதல்வர்கள் நூற்றுவர். அவர்கள் அங்கே வளருகின்றார்கள். இனிச் சில நாட்களுக்குள் பாண்டுவுக்கு மரணம் சம்பவிக்கப்போகின்றது. மரணத்துக்குப் பின் ஐவரும் தாயும் நகரத்துக்கு வந்து நூற்றுவரோடு வசிக்க வேண்டியவர்கள். இதனை முக்காலமும் உணர்ந்த வியாசர் முன்னமே உணர்ந்து, அத்தினபுர நகரத்தில் வசிக்குந் தாயிடம் வந்தார். தாயின் பெயர் சத்தியவதி. மற்றொரு பெயர் பரிமளகந்தி. வியாசர் சத்தியவதியிடத்தில் பராசரருக்குப் பிறந்தவர். வியாசரைப் பெற்றபின் சத்தியவதி பழையபடி கன்னிகையாய் வீட்டுமரின் தந்தையாகிய சந்தனுவை மணந்தவர். சந்தனுவின் இரண்டாவது தாரம் சத்தியவதி. திருதராட்டிரனும் பாண்டுவும் சத்தியவதியின் பௌத்திரர். அது நிற்க,

வியாசர் தாயைநோக்கித் "தாயே, தருமகாலங் கஷ்டமின்றிக் கழிந்தது இனி அதர்மகாலம் வரப்போகின்றது. அதில் சூதுவாது மற்றொரு சமயத்தாருக்குக் கஷ்டம் விளைவிக்கக்கூடாதென்று விரிவு மனப்பான்மைபேசிக்கொண்டே கஷ்டம் விளைப்பது எல்லாம் நடக்கும் தருமம் விளங்காது. அருமை அன்னையே அதனைப் பார்த்து நீங்கள் காட்டுக்குச்சென்று தவத்தை மேற்கொண்டு முத்தியடையுங்கள்' என்றார். தாயானவர் அதற்கு உடன்பட்டு மருகிகளையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றார்.

'மற்றவர்களைத் திருத்துவதென்பது இனி வாயாது. நாம் திருந்தித் தப்ப வழி தேடவேண்டும். இரண்டாம் ஆளுக்கு இன்னல் விளையாது வாழ்ந்துபோய்விட்டாலே பெரியகாரியம்' என்றின்னேரன்ன கருத்திற் பாரதஞ் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு கடிதம் வந்தது. கடித முகப்பில் மாயாவாத தும்சகோளரியின் கெம்பீரமான படம் இருந்தது. அப்பால் கடிதத்தை வாசித்தேன். '5—4—63 பெரியூர் நா கதிரைவேற் பிள்ளையின் ஞாபக தினம். அவரைப் பற்றி அறிந்ததை எழுதிப் பத்திரிகையில் வெளியிடுங்கள். வழக்கம் போலச் சாட்டுச் சொல்ல வேண்டாம்' என்றிருந்தது கடிதம். அதனை வாசித்த பின் மாயாவாத வேதாந்தம், தான் வாழுதற்கு எவ்வித தடையும் இல்லாத போதும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு அதன் பக்கத்திற் குடிசை அமைத்து இடையூறு விளைக்க முந்துகின்ற இந்த நேரத்தில் மாயாவாத தும்சகோளரியை நினைவு கூருவது பொருத்தந்தானே என்று எண்ணினேன். மாயாவாதத் தொல்லைகள்பற்றிய பழைய எண்ணங்கள் அலையலையாய் என்னுள்ளத்தில் பெருகெடுத்தன. அதனாலே மாயாவாத கோளரி நா. கதிரைவேற்பிள்ளைக்கு வணக்கஞ் செய்து அவரைப்பற்றிச் சற்றே சிந்தித்தேன்.

முதன் முதல் மிக இளமைப் பருவத்தில் மாயாவாத் தும்சகோளரியைப் பற்றி ஒரு அதிசயமான கதை நான் கேட்டதுண்டு அக்கதை தம்மிடம் வந்தவர்களுக்கு மகாலிங்கசிவம் சொன்ன கதை. சற்றே வளர்ந்த பின் அக்கதையை நான் நம்பவில்லை. ஆனல், சாவகச்சேரியில், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணவரும் இராமநாத மான்மியம் அருணசலமான்மியம் பாடியவருமான புலவர் பொன்னம்பல பிள்ளையிடம் நான் படிக்கும்போது அங்கே பிள்ளை அவர்களின் மாணவர்கள் மாயாவாத தும்ச கோளரியின் அதிசயக் கதையை அப்படியே சொன்னர்கள். அதன் பின் 1918-ல் வண்ணை நாவலர் வித்தியாசாலையிற் படிக்கும்போதும் அக்கதையை அப்படியே கேள்விப்பட்டேன். இப்பொழுது அக்கதையில் நம்பிக்கை பிறந்துவிட்டது.

வருகிற பத்திரிகையில் அதனை எழுதுகிறேன்.

—தொடரும்.

## நற் சிந்தனை

—:—

இளமை மூப்பிலா

னெம்பி ராளெனத்

தொழுதிட நின்றவன்

சோதிசொ ரூபனே

## கொடியேற்றம்

—:—

காரைநகர் சிவன்கோவில், மானிப்பாய் மருதடி விநாயகர், கண்டி செல்வ விநாயகர், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆகிய கோவில்களில் இன்று (வெள்ளிக்கிழமை) கொடியேறுகிறது.

## "தென்னவன் பிரமராயன்"

பிரபல நாடகாசிரியரான தேவன் யாழ்ப்பாணம் அவர்களின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றதும் ஆசீர்வெளியீட்டு நிலையத்தினரால் வெளியிடப்பெற்றதும் சைவம் வளர்த்த அருட்சான்றோர்களுள் சிறந்தொருவரும், உருகாத நெஞ்சையும் உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகப் பாக்களைத் திருவாய் மலர்ந்தருளியவருமான மணிவாசகப் பெருமானின் ஒளி படைத்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதுமான தென்னவன் பிரமராயன் என்னும் நாடக நூல் எதிர்வரும்4-4-63வியாழக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இலங்கைத் தமிழ்எழுத்தாளர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் அறிமுகம் செய்துவைக்கப்பட இருக்கிறது. திரு. சி. சரவணபவன் B. A. (ஆசிரியர் கலைச்செல்வி) திரு. இராஜ அரியரத்தினம், திரு. ந. வீரமணி உட்படப் பலர் உரைநிகழ்த்துவர்எனவும்நம்பப்படுகிறது.

---

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே

றென்றுடையானை உமையொருபாக முடையானைச்

சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்

குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்

மன்னுதிருத் தொண்டனர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்

உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்

சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

---

### உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த

## கொடிக்கவி

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் —2)

[அசுத்தமாயையும் சுத்தமாயையும் ஒழியாமல் வருகின்ற புண்ணிய பாவங்களுமாகிய இவைகளின் உண்மையாய் நின்று போகங்களை அனுபவிக்கும் அரிய உயிரினிடத்துப் பொருந்திய மயக்க நிலையிலே அந்த ஞானமானது வெளிப்படாமல் மறைந்து நிற்கும்; அசுத்தமாயையும் சுத்தமாயையும் ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களுமாகிய இவற்றின் உண்மையை அறிந்து அவற்று நின்று நீங்கும் அரிய உயிரினிடத்திலே பொருந்திய அருள்நிலையிலே அந்த ஞானமானது வெளிப்பட்டுப் பிரகாசமாய் நிற்கும்"]

மேலும் இறைவனும் அவன் அருளும் பெத்த நிலையில் இருக்கும் (பேரன்பில்லாத) அபக்குவான்மாக்களுக்குப் பாலில் நெய்போல விளங்காது நிற்கும் என்பதும், (பேரன்புடைய) பக்குவான்மாக்களுக்குத் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றும் என்பதும் ஈண்டு உணரத் தக்கது.

உ—ம்:

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்

தன்னுணரத் தன்னுள் இருத்தலால் — தன்னுணரும்

நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்

பாசத்தர்க் கின்றாம் பதி.

–சிவ. ஞா. போ. சூத்: 12 செய்: 3.

[இறைவனவன் உலகத்துள்ளார் தன்னை உணரும்பொருட்டு திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தனது அன்பர்க்குக் கொடுத்தலாலும் அவ்வன்பர் தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச்செய்தலாலும் அவ்வாறு ஒரு குறியினிடத்து நின்று உணருகின்ற அவர்களைத் தனது வியாபகத்துக்குள்ளாக இருத்தலாலும் குறியும் ஒழிந்து நின்று தன்னை உள்ளவாறு உணருகின்றவர்களிடத்துத் தயிரிலே வியாபித்த நெய்போல விளங்கித் தோன்றுவன்; அவ்வியல்பு அற்ற பாசபந்தமுடையாரிடத்து பாலிலே வியாபித்த நெய்போல விளங்காநிற்பன்."]

3 இருள் (ஒளியை) அடராது:-

இறைவன் எவ்விடத்தும் எப்பொருளிலும் நீக்கமற வியாபித்துள்ளவன் - அவனை அகன்று எங்கும் எவையும் இன்று. எனவே ஆணவம் முதலிய பாசங்களிலும் அவன் வியாபித்துள்ளான். அங்ஙனம் வியாபித்துள்ள அவன் அவற்றை அவற்றுக்குப் புறம்பே நின்று சுட்டி அறியவேண்டியதில்லை. மேலும் இறைவன் முற்றுணர்வினன் ஆதலின் அம்முற்றுணர்வாகிய பேரறிவினுள் அறியாமையாகிய ஆணவம் பொருந்திக் கூடிநில்லாது - ஒளியை இருள் அடராது என்க.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

### அலங்கார உற்சவம்

29-3-63 வெள்ளிக்கிழமை தொடக்கம் 9 தினங்களும் சாயங்காலம் 6 மணி தொடக்கம் நல்லூர் - நாயன்மார்கட்டு ஸ்ரீ வெய்யிலுகந்த விநாயகப் பெருமானுக்கு ஸ்நபன அபிடேகமும் 10-ம் நாள் 108 சங்காபிடேகமும் 11-ம் நாள் திருஊஞ்சல் அலங்கார உற்சவமும் நடைபெறும்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சுபகிருது ஞூ பங்குனி மீ கசுஉ வெள்ளிக்கிழமை


## பொருட்கள் பழுதடைய விடப்பட்டால் யார் பொறுப்பு?

உணவுப் பொருட்களின் விலை உச்சநிலைக்கு ஏறிவிட்டது; அப் பொருட்கள் அரிதாகின்றன என்றெல்லாம் கூறுகின்றோம். ஆனால் ஒவ்வொரு நாளும் எத்தனையோ உணவுக்குரிய பொருட்கள் பழுதடைந்துவிட்டன என்ற செய்தியையும் அறிகின்றோம். பொருட்கள் பழுதடைவது நூதனமல்ல. ஆனால் அவை பழுதுற விடப்பெறுவது நூதனம் மட்டுமல்லப் பெரும் பாதகமும் ஆகும் அல்லவா?

கொழும்பு மாநகரத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான அரிசிமூடைகள் பல நாட்களாகப் பழுதடைய விடப்பட்டனவென்றும் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றதென்றும் அவற்றுட் கிருமிகள் பல தோற்றியிருக்கின்றனவென்றும் திடுக்கிடத் தக்க வகையிலே செய்திகள் சொல்கின்றன. இந்த நிலைமைக்குயார்பொறுப்பு?

முறைக்கு முறையாக இவ்வாறு பெருந்தொகையான பொருட்கள், அநேகமாக ஈருள்ளி, உருளைக்கிழங்கு முதலியன பழுதுள்ளன என்று மக்கள் அறியும்பொழுது, வறுமையிற் செம்மையென்பதை ஆட்சியாளர் அறியார்போலும் என்ற எண்ணம் உண்டாகின்றது அவ்வளவில் நாம் நிற்கவில்லை. பொருள் நட்டத்துக்குப் பொறுப்புயார்? பலதுள்ளி சிறு வெள்ளம் ஆறுபோலப் பலகாலும் தொடர்ந்து நிகழும் இந்த நட்டத்தைக் கண்டும் அரசினர் ஆவனசெய்யாதிருக்கின்றனரே! அணைகட்டி அழிவுறுவதைத் தடுப்பதறியாது வரிகளை மனம்போனவாறு விதித்து மக்களை நீங்கா வறுமைத் துன்பத்துக்குள்ளே தேங்க வைக்கும் ஆட்சியும் ஆட்சியாகுமா?

அரசாங்க சேவையில் அலுவல்களுக்குப் பொறுப்புடைய மேலதிகாரிகள் என்ன செய்கின்றார்கள். அரசபொருட் களஞ்சியங்களை அடிக்கடி பார்வையிட்டுக் கணக்கெடுத்துச் சுத்தப்படுத்திவரும் ஒழுங்கு உண்மையில் நிகழுமானல் இவ்விதமான பழுதுகள் நிகழமாட்டா! நாடு நட்டம் அடையாது. மக்கள் வறுமைப்பட வேண்டியதில்லை. கூட்டுறவு மொத்த வியாபார நிலையங்கள் பண்டசாலைகள் முதலியவற்றிற் பழுதுற்றுப் போகும் பொருட்களின் பெறுமதியென்ன, அதனல் விளையும் பயனுன கேட்டின் தாக்குதல் என்ன, இவற்றை யார் உற்று நோக்குகின்றனர்: உணவுப்பொருள் போதியளவாக இல்லை என்று புலம்புவதோடமையாது உள்ளனவற்றைப் பேணி உபயோகிப்பதற்கு வழி தேடுவதே உகந்த நெறியாகும்;

## ஞானப்பிரகாச முனிவர் குருபூசை

நாள்: சுபகிருதுஞூ பங்குனிமீ உகஉ (3-4-63) புதன்கிழமை.
இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
நிகழ்ச்சிகள்:
இரவு 7 மணி ஆரம்பம்
கடவுளாராதனை
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள்
ஞானப்பிரகாசமுனிவர்பற்றிய விரிவுரைகள்
பண்டிதர், பிரம்மஸ்ரீ. வ. மு இரத்தினேசுவரஐயர் அவர்கள்
சைவப்புலவர், வ. கந்தசாமி அவர்கள்
சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக
மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம் 29-3-63.

## ஈழகேசரி பொன்னையா நினைவு தினம்

ஈழத்தில் அண்மைக் காலம்வரை இலக்கிய சேவை புரிந்துவந்து இப்பொழுது வெளிவராதிருக்கும் ஈழகேசரி மூலம் எண்ணற்ற தமிழ்இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கி வளர்த்துவிட்ட வகையில் காலத்திற்கேற்ப தமிழ் மொழி மறுமலர்ச்சிபெறுவதற்குப் பெருமளவில் சேவைபுரிந்த காலஞ்சென்ற திரு. பொன்னையா அவர்கள் நினைவை நாளை குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் பெருவிழாவெடுத்துக் கொண்டாடுகின்றனர்.

சன்மார்க்கசபை மண்டபத்தில் நிகழும் இவ்விழாவில் முற்பகல் நிகழ்ச்சிகளாக, பேச்சுப்போட்டிகள், வழிபாடு, அன்னம்பாலிப்பு முதலியவை நடைபெறும்.

மாலை 2-30மணியிலிருந்து போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசளிப்பும், அடுத்து இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்தும் கருத்தரங்கமும் நடைபெறும். இரவு நிகழ்ச்சிகளாக மூன்று நாடகங்கள் நடைபெறும். ——

## சைவ சமய நூல் நிலையத் திறப்புவிழா

ஸ்ரீ. கற்பக விநாயகர் ஆலயம் (சாந்தையர்மடம்)கூட்டுப்பிரார்த்தனைச்சபையின் சார்பில் 28-3-63 இரவு 8 மணியளவில், சைவ சமய நூல் நிலையத்தை திரு. சோ. இராசரத்தினம் செட்டியார் M. M. C. அவர்கள் திறந்து வைத்தார். சைவப்புலவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் வரவேற்புரை நிகழ்த்தினர், பண்டிதர், வே. சங்கரப்பிள்ளை, திரு. க. முருகேசு ஆசிரியர் ஆகியோர் உபந்நியாசம் செய்தார்கள். பிரம்மஸ்ரீ. கா. மகேஸ்வரக்குருக்கள் விழாவை ஆரம்பித்துவைத்தார்.

நேயர்கள் நெஞ்சம்

# புராணந்தான் - தத்துவமல்ல!

—0—

## தத்துவம் அதிலும் மேம்பட்டது

பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், இ. திருநாவுக்கரசு அவர்கள் பேசிய திருக்கோவையார்பற்றிய கருத்துக்கள்பற்றி 22-2-63 இல் நேயர்கள்நெஞ்சம் பகுதியில் அன்பர் திரு சி. சின்னையா ஆசிரியர் அவர்கள் எழுதிய விளக்கத்திற்குரிய விளக்கவுரை வருமாறு:-

கதை காதை என்பன ஒரு பொருட்கிளவிகள். அவை புராணம் என்னும் பொருளுடையன. பொய்மையான கட்டுக்கதை என்பது பொருளன்று. புராணங்களாவன வேத சிவாகமங்களாகிய முதனூல்களோடு தத்துவ உண்மைகளின் மாறுபாடில்லாதனவாகிக் கதை வடிவினவாக சாஸ்திர உண்மை உணராதவர்கட்கும் தத்துவ உண்மையைக் கதைதழுவி உணர்த்தும் மரபில் அமைந்தவை அவற்றுள்வரும் தத்துவ உண்மைகள் மரபுநிலை திரியாதவை. கதைகள் தத்துவ மரபு திரிந்துளவேல் அவை முகமன் அல்லது உபசார வழக்கென்று கொள்ளல் வேண்டும். பதினெண் புராணங்களில் சிவபுராணங்கள் ஒழிந்த ஏனையவை உபசாரமாகப் புராணவழக்கொடு அமைந்து புனையப்படுதல் இயல்பாதல் கச்சியப்பசிவாசாரியாருக்கும் உடன்பாடு. புராணங்களில் வரும் தத்துவார்த்தங்கள் உண்மை. அவற்றுக்கு உபகாரமாக அமைந்த கதைகள் அப் புராணத்தை மொழிந்த பௌராணிகரின் புனைந்துரை. உபசார வழக்கால் அவை அமைவுடையனவாக ஏற்றுக் கொள்ளப்படுதல் மரபு. இதனைச்,

சொல்லிய புராணமாந்
தொகையுள் ஈசனை
அல்லவர் காதைகள்
அனையர் செய்கையுள்
நல்லன விரித்திடும்
நவைகள் மாற்றிடும்
இல்லது முகமனென்
றெடுத்தியம் புமே.

எனக் கந்தபுராணம் அவையடக்கம் பாசுரம் வரம்பு கூறுகிறது.

அப்பிரமாணத்தின்படி குருந்தமர நீழலில் ஞானசாரியராகி எழுந்தருளிய பரமபதியைப் பக்குவத்தாலடைந்த மணிவாசகர் ஞானோபதேசம் பெற்று நயனம், பரிசம், வாசகம், மானசம் சாஸ்திர யோக தீட்சைகள் பெற்றுத் தலைவன்தான் தலைப்பட்டதுதான் தத்துவ உண்மை. அந்த உண்மையை விளக்க உபசாரமாகப் புராணமரபு திரியாமல் ஆக்கப்பட்ட பாசுரங்களே திருவாதவூரடிகள் புராணத்தும திருவிளையாடற் புராணத்தும் கூறப்பட்ட வினுவிடைகள். அவற்றை நாமும் ஓதியும் உணர்ந்தும் வந்துள்ளோம். ஆகவே இவ்வினுவிடைகள் புராணத்து இடம் பெறுதல் மரபுக்கு மாருனதொன்றன்று. அதனுலேதான் கடவுள் மாமுனிவரும் பரஞ்சோதி முனிவரும் ஆக்கிய புராணங்கள் மரபுமுறைக் கமைந்தனவாக உலகம் கொண்டுள்ளதும் ஸ்ரீலஸ்ரீ. நாவலர்பெருமான் பதிப்பித்ததும், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் உரை எழுதியதுமாகும்.

அவர்களுக்கும் இந்த உண்மை தெரியும் என்பது அவர்கள் சிஷ்ய பரம்பரையில் வந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை இவ்வுண்மையே சரியென ஒப்புக்கொண்டுள்ளமையால் அறியலாம். தத்துவ மரபு ஆராய்ச்சிக்குப் பினசார்ந்தது புராண மரபு புராணமரபில தோன்றிய கடா விடைகளே தத்துவ மரபு என மயங்குவதுதான் திரிபுணர்வு.

நம்மவர்கள் என்று குறிப்பிட்டது பௌராணிகராவாரை, புராணங்களை ஆக்குபவரும் அதன் வழி ஓதுபவரும் புராணமரபு தெரிந்தோரும் பௌராணிகராவார். மேலும் மணிவாசகர் தம வாக்குள்ளே ஞானசாரியர் சிவஞானபோதம் என்ற நூலை உபதேசித்ததாகயாண்டும் கூறிற்றிலர் அவர் உணர்ந்தவை சிவஞானபோதம் உணர்ந்தது சிவஞானம். ஆன்மபோதம் நீங்கியபின் மன் செயலதாக மதித்துணர்ந்தவை. அதனைச் சித்தமதைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் என்றும், காட்டாதனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத்தேன்காட்டி நாட்டார் நகைசெய்ய நாய்மேலை வீடெய்த ஆட்டான் கொண்டாண்டவா பாடுதும் ... ... என்றும் வெளிப்படையாக மாணிக்கவாசகர் கூறுகிறார். சிவஞானபோத நூல் வாயிலாக நாம் சிவஞானமாகிய போதத்தை உணர்தல் வேண்டுமென்பது கருதி ஆக்கப்பட்ட குறிக்கோளுடன் இருபுராணங்களிலும் சொல்லப்பட்ட புராணமரபினமைந்த அப்பாசுரங்களில் உள்ள வினுவிடைகள் புராணமரபு நோக்க அமைவுடையன என்பதும் தத்துவ மரபு, அதற்கு மேம்பட்டதாதலாலும், மணிவாசகர் வாக்கினுலும் அவருணர்ந்தது உண்மையான சிவஞானமாகிய போதமே என்பதும் தெளிவுறக் காணக்கிடக்கின்றன. புராணமரபைத் தத்துவ மரபு என்று மயங்குவது திரிபுணர்வாகும். அன்பர் இதனை ஏற்றுக்கொள்வார் என்பது நம்பிக்கை. ஆசங்கை உளவேல் மீண்டும் ஆராயலாம்

கல்வித்துறையில் ஆராய்ச்சி சம்பந்தமாக வாதப்பிரதிவாதங்கள் தோன்றுவது வரவேற்கத்தக்கது. மேலும் நன்னூலும் இலக்கணசுருக்கமும் இலக்கண நூல்கள் என்பதை யார் ஆசங்கித்தது அவை சார்பு நூலும் அதன் சுருக்கமுமானவை. ஆனல் அவை இலக்கண வரம்பாக அமைந்தனவன்று - வரம்பாக அமைந்தது தொல்காப்பியமே. இவை திரிபு, வேறுடைய புடை நூல் எனப் பவணந்தியே ஒப்புக்கொண்டார். அகத்தியமே தமிழ் இலக்கண முதனூல், அது ஐந்திலக்கணத்தறகும் வரம்பானது அதன்வழி நூலாகிய தொல்காப்பியம் பின்னேன் வேண்டும் விகற்பமுங் கூறி ஐந்திர வியாகரணத்தையும் தழுவி வடமொழிக்கலப்பையும் சேர்த்து யாப்பணி அதிகாரங்களைப் பொருளதிகாரத்து இரு இயல்புகளாக வகுத்து வழிநூலாக அமைந்தது. அகத்தியம் அழியத் தமிழிலககணத்திற்கு வரமபாக உள்ளது தொல்காப்பியமே

நன்னூல், சின்னூல், (நேமிநாதம்) முதலாயினவற்றில் ஆசங்கை தோன்றினல் வரம்பாக மரபு கூறவேண்டியது தொல்காப்பியமே, புராணங்களுக்கு வேதசிவாகமங்கள் எப்படி வரம்பாகிறதோ அவ்வாறே தமிழிலக்கணத்திற்கு முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்ததொல்காப்பியம் வரம்பாகும் தகுதியுடையது. பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய இலக்கிய நூல்கள் சங்க நூல்களே. அவற்றை யார் குறையென்று கூறினர். ஔவை சங்கத் தமிழ் மூன்றும் தா என்று விநாயகப் பெருமானை வேண்டிக்கேட்ட தமிழின் பிரேரகமாக விளங்கும் அவற்றை யார் குப்பைகூளம் என்றது? ஆனல் பன்னிருதிருமுறைகள் பதினன்கு சித்தாந்த சாத்திரங்களாகிய சிவஞானபோத சாத்திரங்களின் பின் சரவைத் தெண்ணத் தக்கவை. இக்கருத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ நாவலர் பெருமானதும, அவர் வழி சஷ்ய பரம்பரையில் வந்தோரதும் கருத்தாகும் நாவலர் பெருந்தகை கருவிநூலுணர்ச்சி, ஞானநூலுணர்ச்சிக்கு மிக இன்றியமையாதவை என்பதைத் தன் விநாயக வணக்கத்திலேயே கொள்ள வைத்துள்ளார்.

'சீர்பூத்த கருவிநூலுணர்ச்சி தேங்கச் – சிவம் பூத்த நிகமாக மங்களோங்க" என முறைப்படுத்திக் கூறியுள்ளார். கருவி நூலுணர்ச்சி வேதசிவாகமங்களுக்கு உபகாரமாதல் கொள்ள வைத்தார் ஆகவே பொய்யா இறைவன் நூல்களான வேத சிவாகமங்களும் அவற்றின் உண்மை தெரிவிக்க வந்த சமய சாத்திர நூல்களும் சிவ போதம் தெரித்தலால் மேலா

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நுண் தொழில் இளைஞன்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் அரசாங்க கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரியில், கல்லூரியின் நுண்தொழில் இளைஞன் என்னும் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நடைபெறவிருக்கிறது. ——

## சொல்லச் சொல்ல வெல்லம் போல!

★

### “அளவையூர் - சஞ்சீவி”

**இராகம் : ஸ்ரீரஞ்சனி** : **தாளம் : ரூபகம்**

சொல்லச் சொல்ல வெல்லம் போல
சுவைக்கு மம்மா உன்றன் நாமம் (சொ)

தில்லையாடும் ஜெகஜ்ஜ னனி
சிவபூரணி ஸ்ரீரஞ்சனி (சொ)

தந்தை தாயர் தனயர் தாரம்
சந்தை உறவு தாங்கு பாரம்
சிந்துங் காலன் சேர்ந்த நேரம்
செல்வியே நீ தானு தாரம். (சொ)

---

### சம்ஸ்கிருதப் பரீட்சை முடிபுகள்

சென்ற மாதம் 17-ந் தேதி நடந்த அமரபாரதி பரீக்ஷா ஸமிதி (சென்னை)யின் சம்ஸ்கிருதப் பரீட்சைமுடிபுகள் வெளிவந்திருக்கின்றன. சம்ஸ்கிருத விஸ்வபரிஷத் புத்தூர்க் கேந்திரத்தின் ஆதரவில் ஆண்டில் இருமுறை இங்கு நடத்தப்படும் இப் பரீட்சைகள் சென்ற மாதம் ஐந்திடங்களில் நடத்தப்பட்டன. 51 பரீட்சார்த்திகள்பரீட்சையெழுதினர். இவர்களுள் நால்வர் தவிர ஏனைய 47 பேரும் சித்திபெற்றிருக்கிறார்கள்.

முதற்பரீட்சையில் உயர்தரசித்தியில் முதலிடம் பெற்ற ஒருவர் தங்கப் பதக்கமும், ஒருவர் வெள்ளிப் பதக்கமும், இரண்டாவது பரீட்சையில் மூவரும், மூன்றாவது பரீட்சையில் ஒருவரும் வெள்ளிப் பதக்கங்களும் பரிசுகளாகப்பெறுகிறார்கள். உயர்தர சித்தி பெற்றும் பதக்கப்பரிசுபெறமுடியாத 9 பரீட்சார்த்திகள் பாராட்டுப் பரிசு பெறுகிறார்கள்.

சென்ற ஆவணிமாதத்தில் நடந்த ஸமிதிப் பரீட்சைகளில் தேறியவர்களுக்கும், பம்பாய் பாரதீய வித்யா பவன பரீட்சைகளில் தேறியவர்களுக்குமுரிய பரிசுகளும் பத்திரங்களும் 7-4-63 இல் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் வால்மீகி தினவிழாவில் வழங்கப்படும்.

— —

### நாயன்மார் வழியில்!

நான்கு சமயகுரவர்களும் காட்டிய வழியே நாம் செல்வோமாகில் இறைவனை எளிதில் காணலாம். வயோதிபர்களாகிய நீங்கள் உட்பற்று வெளிப் பற்றை அகற்றி இறைவனை வழிபடுவீர்களாகில் இறைவனை எளிதில் காணலாம் என சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் கைதடி வயோதிபர் விடுதியில் நடைபெற்ற சமயப் பிரசங்கத்தின்போது தெரிவித்தார். மேலும் பேசுகையில் நாவலர் பெருமான் காட்டிய வழியைப் பின்பற்றி நாம் சமயப்பிரசங்கங்கள் செய்து வர வேண்டும். இக்காலம் நாஸ்திகம் பரவிவரும் காலம்; ஆகவே நாம் மாணவர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் எனக் கூறினார். திரு. கங்காதரன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

— — —

### சமயத்துறையில் தோன்றியுள்ள புத்துணர்ச்சி

—o—

[சைவசமய நூல்நிலையத் திறப்பு விழாவின்போது திரு. சோ. இராசரத்தினம் செட்டியார் M. M. C அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

ஒருநாட்டு மக்களின் சமய மேம்பாடே அந்நாட்டின் மக்கட் பண்பாகும். அப்பண்பாட்டிற்கு உறுதுணையாய் விளங்குவது நூல்களாகும். மக்களுக்கு விழுமிய பயனளிக்கும் நூல்களை எல்லோருக்கும் பகிர்ந்தளித்துப் பயனடையச் செய்வது நூல் நிலையமாகும். சுவாமி விவேகானந்தர் “சாட்சாத்காரணபூபதியடைந்த மனிதர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை மட்டுமே படித்தல் வேண்டும். மக்களின் மனமானது தாமதகுணம் மேலோங்கி, தெய்வீகத்தன்மை மறைந்துகிடக்கும் சமயத்தில் எல்லாம் இந்நூல்களைப்படிப்பதனால் அநுபூதிமான்களின் வாக்கியங்களை நினைவூட்டுவதோடு மனோசாந்தியும் இருதய பரிசுத்தமும் தெய்வீகத்தன்மையும் உண்டாக்கிப் புதிய உற்சாகத்தைக் கொடுக்குமென்பது முற்றிலும் உண்மையாகும்’ என்றார். எனவேதான் நம் முன்னோர்கள் ஆலயங்கள் தோறும் புராணபடனம் முதலியவற்றையும் தேவார திருவாசகம் முதலிய தோத்திரங்களையும் ஆலயவழிபாட்டுக் கிரியையோடு ஒட்டியமைத்துப் பேணி வளர்தது வந்தார்கள். ஆலயத்தோடு தொடர்பாகவே நூல் நிலையங்களையும் மடாலயங்களையும் அமைத்து வளர்த்து வருவாராயினார்கள். காலப்போக்கில ஏற்பட்ட சில மாறுதல்களால் பெரும்பான்மையோர் கைவிடச் சில இடங்களில் மாத்திரம் இடையிடையே நடத்தி வந்தார்கள். வருகிறார்கள். இப்போ சில காலமாக ஓர் புதிய உற்சாகமும் உணர்வும் தலைப்படுவதைக் கண்கூடாகக் காணக் கூடியதாயிருக்கிறது. இந் நூல் நிலையமானது இவ்வாலயத்தோடு சார்ந்திருப்பது சாலவும் பொருந்துவதாகும். அதுவுமன்றிப் பழங்காலச் சைவப் பண்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டுமாகும்.

— —




### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B: 4160.

1. விசுவநாதர் சொக்கலிங்கமும் அவர் மனைவி
2. பாக்கியலட்சுமி

பாலாவோடை, காரைநகர் கிழக்கு —வழக்காளிகள்.

எதிராக:

1. அம்பலம்சின்னத்துரையும் மனைவி
2. நாகம்மா, சண்டிலிப்பாய்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B 4460-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு வைகாசிமாதம் 11-ம் திகதி சனிக்கிழமை காலை 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 678/33-ம். 20-12-61 தொடக்கம் 13 - 3 – 62 வரையில் ரூபா 400-க்கு 10வீத வட்டியும் அதன் பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுத் தீர்வைத தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 135-60 ம் இதில் ரூபா 300/- கோட்டில் கட்டப்பட்டிருக்கிறது. செலவால் ரூபா 75/- கொடுபட்டது.

ஆதன டாப்பு:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயில்பற்று சண்டிலிப்பாயிறை “கீலத்தறை” 3 3/8 லாச்சப், நிலலாச்சம் மூன்றே காலே அரைக்கால், இதில் மேற்குப்பக்கமாக நிலை இலாச்சம் 2 7/8 இலாச்சம் இரண்டே முக்காலே அரைக்காலும், வீடும், செய்பயிர் வான்பயிர்களும், வடகிழக்கேயிருக்கும் கிணற்றுப்பங்கும் வழமையான வழி வாய்க்கால் உருத்தும். இதற்கு எல்லை கிழக்கு ஆவளைப் பிள்ளையார் கோவிலுக்கு விற்றமிருதி நிலம். வடகுகு ஒழுங்கை, மேற்கு கதிர்காமர் செல்லத்துரையினுதனம், தெற்கு சபாரத்தினம் பெண் மகேஸ்வரியினுதனம், இந்த எல்லைப்படி அடஙகலும். முற்பதிவு E 308/300.

**க. செல்வத்துரை,**
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
“முருகன் இல்லம்”
இணுவில், 26-3-63.
M. 293 29-3-63.

---

### பிச்சாடணமூர்த்தி பிரதிட்டாதினம்

—()—

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரி - பேச்சியம்பாள் கோவிலின் வட கீழ்ப்பாகத்தே அமைந்திருக்கும் திருக்குளத்தின் அருகாமையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பிச்சாடணமூர்த்தியின் பிரதிட்டாதினம் உத்தர புண்ணிய தினமாகிய 13-4-63 ஞாயிற்றுக் கிழமை வழமைபோலச்சிறப்பாக நடைபெறஇருக்கின்றது.

— —

## பாக்குநீரிணைப் பாலியவீரன்

பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக் கடந்து தமிழினத்திற்கும் தன்னைப் பெற்றெடுத்த யாழ்ப்பாணத் தமிழ் மண்ணிற்கும் பெருமை தேடித் தந்துள்ள வீரப்புதல்வன் வல்வை ஆனந்தனுக்கு வரவேற்புக்களும், பாராட்டுக்களும் வழங்குவதில் ஈழத் தமிழ் மக்களால் காட்டப்படும் பேரார்வமானது பலவேறு துறைகளிலும் இத்தகைய ஆயிரமாயிரம் சாதனைகளை தமிழிளைஞர்கள் நிலைநாட்ட வழி வகுக்கும் என்பதில் ஐயமே இல்லை.

=0=

நீரிணையை நீந்தி நெடும்பாரதக்கரையைச்
சேரிளைஞன் ஆநந்தன் சீர்த்திறலைப் — பாரினிலே
போற்றுவதேன்? தொன்மைப் புகழார் தமிழினத்தின்
ஆற்றலிது வாமென்ப தால்!

---

### உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த...

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

x x x

பூமியிலே பொருந்திய இருளைச் சூரிய ஒளி கூடிக் கலக்கிறது. அங்ஙனம் கலக்கும்போது அவ்விருளை ஒளி காண்பதில்லை - ஒளிக்கு இருள் என்பது இல்லாத பண்டம். ஆயினும், இருள் ஒளி நின்ற இடத்தை அகன்று வேறு ஓர் இடத்துக்குப் போகவும் இல்லை; அது அங்கேயே உள்ளது - ஒளியைக் கூடி மயக்கி அகற்றமாட்டாமல் அங்கு வலிகுன்றிக் கிடந்த இருள் பூமியை மயக்கி நிற்கும்

சூரியனது ஒளி இருளைக் கலந்து நிற்பதுபோல சிவஞானம் ஆணவத்தைக் கலந்து நிற்கும் என்பதும், அங்ஙனம் கலந்து நின்றும் ஒளி இருளைச் சுட்டிக் காணாததுபோலச் சிவஞானமும ஆணவத்தைச் சுட்டி * அறியாது எனபதும், ஒளி இருளைக் கலந்து நின்ற போதும் இருளினால் ஒளி பற்றப்பட்டு மயக்கப்படாமை போல சிவஞானமும ஆணவத்தைக் கலந்து நின்ற போதும் ஆணவத்தினால் அச்சிவஞானம் பற்றப்பட்டு மயக்கப்படாமையும் ஈண்டுப் பொருத்தி உணரத் தக்கன.

உ—ம்:

“அன்னிய மிலாமை அரற்கோன்றுணர் வின்றும்
அன்னியமி லானசத்தைக் காண்குவனேல் — அன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள் போல்
மாணு அசத்தின்மை மற்று”.

—சிவ. ஞா. போ. சூ. 7. செய்: 1.

* சிவஞானம் ஆணவத்தை அறியாது என்றமையால் இறைவனின் முற்றுணர்விற்குப் பங்கம் உண்டாமேயெனின், அறியாமையாகிய ஆணவத்தை அறிவதாலேயே அறிவுக்குப் பூரணத்துவம் குறையுமாதலாலும், அவ்வாணவத்தை அறிவதால் ஆவதொரு, நன்மைப்பாடும் இல்லையாதலாலும் அது இழுக்காகாமை யுணர்க.

---


உ

**சைவ பரிபாலன சபையாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றுள்ள**

# பாட புத்தகங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| பாலபாடம் அரிவரிப்புத்தகம் | — | -60 |
| பாலபாடம் முதலாம் புத்தகம் | — | -50 |
| பாலபாடம் இரண்டாம் புத்தகம் | — | -70 |
| பாலபாடம் மூன்றும் புத்தகம் | — | -85 |
| பாலபாடம் நான்காம் புத்தகம் | — | 1-05 |
| பாலபாடம் ஐந்தாம் புத்தகம் | — | 1-15 |
| பாலபாடம் ஆறும் புத்தகம் | — | 1-20 |
| பாலபாடம் ஏழாம் புத்தகம் | — | 1-25 |
| பாலபாடம் எட்டாம் புத்தகம் | — | 1-35 |
| (சைவத்திரு ச. சிவபாதசுந்தரம்பிள்ளை, B A.-அவர்கள் இயற்றிய) | | |
| சைவபோதம் முதற் புத்தகம் | — | -60 |
| சைவபோதம் இரண்டாம் புத்தகம் | — | -70 |
| திருவருட்பயன் விளக்க உரையுடன் | — | -85 |
| கை எழுத்துப் பயிற்சிக்கு கைவந்த | | |
| தமிழ் எழுத்துனுப்புப் புத்தகம் (அச்சுக்கொப்பி) | 1-ம் | -30 |
| ,, | ,, 2-ம் | -30 |
| ,, | ,, 3-ம் | -30 |
| ,, | ,, 4-ம் | -30 |
| ,, | ,, 5-ம் | -30 |
| ,, | ,, 6-ம் | -30 |

பண்டிதமணி வித்துவான். ந. சுப்பையபிள்ளை அவர்கள் எழுதிய

**கம்பராமாயணம் — சுந்தரகாண்டம்**

காட்சிப்படலம் நிந்தனைப்படலம் (பாரதியார் பாடல்கள்) 3-70

தினவாவு இடாப்பு 1-70

இவைகள் இந்துசாதனக்காரியாலயத்திலும், யாழ்ப்பாணம் பிரபல புத்தக வியாபாரிகளிடமும் பெறற்பாலன. தொகையாக வாங்குபவர்கட்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

அதிபர்,
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
1—4—63.

இவ்வாரம் 31-3-63 — 6-4-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இனத்தவருடன் சச்சரவு தொடரும். செலவுகள் பெருகும். இக்கட்டிலிருந்து நண்பர் காப்பர். மூத்த சகோதரர் உதவுவர்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

விலபுலங்களால் இலாபம் நிச்சயம். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும். தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

இனத்தவருடன் சச்சரவுகள் உண்டாம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றி பெறும். தந்தைவழி உறவினர் உதவுவர். புகழும் சமூக வெற்றியும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

உடல்நிலையும் குடும்ப நிலயும் மேலும் திருப்தியாயிருக்காது. பணமளவில் நல்ல வாரம். மேலிடத்தாரின் சலுகையும் உண்டாம்

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

கண்டனம் சிலவற்றைச் சந்திக்க நேரிடும். அலுவலகத்தில் சச்சரவு உண்டாம். உடல்நிலை பாதிக்கப்படும். நண்பர்களுடன் தவருன விளக்கங்களுக்கும் தடையில்லை.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

புது முயற்சிகளில் வெற்றி, பண வருமானம், இனசனம் வழியான தொல்லைகள் ஏற்படும். எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் சண்டைக்கு வருவர்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உமதெண்ணம்போல் நடந்துகொள்வது கடினமாக இருக்கும். வழக்குகளும் எதிரிகளின் தொல்லைகளும் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணமளவில் நல்ல வாரம். ஞாயிறு. திங்கள், செவ்வாய் காலை தொல்லைகரமானவை. மிகுதி நாட்கள் சாதகமாகும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

தம்பி தங்கைகள் மிக உதவுவர். சொந்தப் பிரச்சினைகளிற் சில தீர்வுறும். செவ்வாய், புதன், யாழன் தொல்லையாக மாறலாம். இறுதி இருநாட்களும் சாதகமாகும்

**மகராசி** உத்தராடம் 2, 3, 4 பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

எதிர்ப்புகளும் நினைத்தபடி நடந்துகொள்ள முடியாத நிலைமையும் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம். வியாழன் மாலை வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

திரும்பவும் ஒரு நல்ல வாரம். எதிர்ப்புக்கரைந்துவிடும், புகழும் சமூக வெற்றியும் உண்டாம். ஆனல் சிறு சுகவீனங்களுக்கு இடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். விவசாயத்தால் இலாபம் உண்டாம். ஆனல் உடல்நிலை திருப்தியற்றதாகவே இருக்கும்.

## வள்ளியம்மை திருக்கலியாணம்

இன்று காலை 10 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ. கந்தபுராண படலத்தில் கடைசிப் பகுதியாகிய வள்ளியம்மை திருக்கலியாண வைபவம் படிக்கப்பெற்று முறையே ஓமக்கிரியைகளோடு நடாத்தப்பெற்று சுவாமி எழுந்தருளி வீதிவலம் வருகிருர்.

## பரிசளிப்பு விழா

காரைநகர் இந்துக்கல்லூரியின் 7-வது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் 1963-ம் ஆண்டு பங்குனி மாதம் 29, 30-ம் திகதிகளில் நடைபெறுகின்றன.

யாழ் - மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் பிரதம விருந்தாளியாகக் கலந்து கொள்வார் எனத் தெரிய வருகிறது. ——

## தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கூட்டம்

எதிர்வரும் 30-3-63 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் வழக்கறிஞர் திரு M. S. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவிருப்பதாகவும், அன்று மாலை 4-30 மணியளவில் திரு. G. G. பொன்னம்பலம் Q. C உட்படப் பலர் சொற்பெருக்காற்றும பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற இருப்பதாகவும் அறியப்படுகிறது.

## நள - தமயந்தி

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபம் நிறுவும் நிதிக்காக, எதிர்வரும் 6 - 4 - 63 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு கல்லூரி அரங்கில, கல்லூரி மாணவிகள் நடிக்கும 'நள-தமயந்தி' நாடகம் நடைபெற இருக்கிறது. திரு. S. U. சோமசேகரம் M. A தலைமை தாங்குவார்.

மாணவருக்கான விசட காட்சி 5 - 4 - 63 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

## பெயர் மாற்றம்

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்
26-3-63.

வலிகாமம் மேற்கு. பண்டதரிப்புக்கோயிற்பற்று. மாகியப்பிட்டியில் வசிக்கும் பொன்னம்பலம் — மயில்வாகனம் ஆகிய நான்: இன்று தொடக்கம் எனது பெயரை, பொன்னம்பலம் சிவஞானியார் என மாற்றி அவ்வாறே (அதாவது) பொன்னம்பலம் சிவஞானியார் என்ற பெயருடன் எல்லா அலுவல்களையும் எழுத்திலோ பேச்சிலோ நிகழ்த்துகின்றேன் என்று இததால் யாவருக்கும் அறிவிக்கிறேன். இன்று தொடக்கம் பொன்னம்பலம் சிவஞானியார் என்றவழங்கும்பெயர் முன், பொன்னம்பலம் மயில்வாகனம் என்று வழங்கி வந்த பெயரையே குறிக்குமென்றும் வெளிப்படுத்துகின்றேன்.

இங்ஙனம்,
பொ. சிவஞானியார்.
M 292 29-3-63.



யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


# புராணந்தான் ……………

(?-ம் பக்கத் தொடர்ச்சி)

னவை. அவற்றின் பின் சாரவே சங்க நூல்கள் அவற்றுக்கு உபகாரமாக வைத்தெண்ணத் தகுந்தவை என்பது நாவலரவர்களது கருத்தாகும். சங்கநூல்களை முதல நூல்களை உணர்தற்குரிய கருவிநூல்களெனச் சுட்டி இருத்தல் நோக்குக.

மேலும் இலக்கணத்துட் சிறந்த தொல்காப்பியத்தையும் நூல்களிற் சிறந்த திருக்குறளையும் அறிவு நூற்பொருளும் உலகியல வழக்கும் என்றிரு பொருள் நுதலியெடுத்துக்கொண்ட அகத்துறை நூல்களில் சிறந்த திருக்கோவையும் உயர்ச்சி எனக்கூறிய தன் பொருள் மற்றயவற்றைத் தாழ்த்தியதென்று பொருள் கொண்டது தவறாகும்.

சேனாவரையர் ஆவாழ்க அந்தணர் வாழ்க என்பதன் பொருள் ஏனைய உயிரினமும் மக்களும சாக என்று பொருளன்று என்று மரபு கூறியமை நோக்குவாராக, அப்படிப் பொருள்கொண்டால் வாழ்க அந்தணர் என்ற பாடலும் பிழையாகிவிடும். மேலும்,

பூவிற்குத் தாமரையே
பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா
யானைக் – கமரரும்பர்
தேவிற் றிருமா லெனச்சிறந்த
தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண் பா.

என்ற பாசுரமும பிழையாகிவிடும். என்னை? தாமரையும் சாம்புநதமும காமதேனுவும் கஜேந்திரனும் திருமாலும், வள்ளுவர் குறளும் உயர்ந்தன என்று கூறிய தனல் அருத்தாபத்தியால் ஏனைய குப்பை கூளங்கள் என்று பொருள் கொள்வது போன்றதே அன்பர் கூற்று

மேலும் கம்பநாடன் சிலம்பி என்ற கணிகையைப் புகழ்ந்து பாடும்போது,

தண்ணீரும் காவிரியே
தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ
மண்டலமே — வண்ணாவான்
அம்பொற் சிலம்பி
அரவிந்தத் தாழ்பணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

என்ற பாசுரம் அன்பர் கருத்தின்படி பிழைப்பட்டதாகும். காவிரியும் சோழனும சோழமண்டலமும் சிலம்பியும அவள்காற்சிலம்பும் சிறந்தனவெனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்துக் கம்பன் பாடியிருப்பதால் ஏனைய கங்கை முதலிய நதிகளும் பாண்டியர் முதலான அரசர்களும் தமிழ் வளர்த்த பாண்டியநாடு முதலான நாடுகளும், விலைமகளாகிய சிலம்பிதவிர, கற்பிற் சிறந்த சீதை முதலாகிய பெண்டிரும், அச்சிலம்பியின் சிலம்பு ஒழிந்த கண்ணகி சிலம்பு முதலாய மங்கையர் அணிகளையும் குப்பைகூளங்கள் என்று கம்பரும் கொள்ள வைத்ததாகவன்றோ முடியும.

மேலும் இலக்கண நூல்களைத் துருவி ஆராய்ந்து அவற்றில் தெரிவிக்கப்படாதனவும், இலக்கண மரபு தெரியாதனவுமாகிய இலக்கண முடிபுகளைக்கொண்டது இலக்கணக்கொத்து. அந்நூலாசிரியர் கூறிய வாக்குத்தான் பல்காற் பழகினும் தெரியாவுளவேற தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் விளங்கும் ஆண்டினும் இல்லையேல் வடமொழி வெளிபெற விளங்குமென்ப ஈன்பது. ஆகவே இலக்கணக் கொத்து நூலாசிரியரும் மரபு திரிந்துரைத்த குற்றமுடையர் என அன்பர் கருதுகிருர்போலும். மேலும்,

வள்ளுவர் சீரன்பர்மொழிவாசகம்
தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகன்
செய்தவுரை ஓள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகு
சித்தி ஓரா றும்
தண்டமிழின் மேலாந் தரம்.

என்றபாசுரமும் பிழைபட்டதாய் முடியும ஏனெனில் ஏனைய நூல்களும் குப்பை கூளங்கள் என்று மதிப்பட்டதாகியன்றோ முடியும், ஆகவே சிறப்புடைப் பொருளை விதந்து சொன்ன மாத்திரையேயன்றி அதனல் ஏனையவற்றைத் தாழ்த்திச் சொன்னதாகப் பொருள் கொள்வது தமிழ் மரபன்று என்று கூறிமுடிக்கிறேன்.

## நல்லூரில் சமயப்[…]

—0—

நல்லூர் தேவஸ்தான[…] முகதீர்த்த மண்டபத்தி[…] இ. பொ. சே. சங்க ஆதர[…] இன்று நிகழும் சமயப்பிரச[…] வைபவத்தில் ஸ்ரீமதி வசந்[…] மலர் நாதன் பங்குபற்றுகின்றுர்கள். ——



## கட்டளை விளம்பரம்

M/2369

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்[…]டில் M/2369-ம் இலக்கத்[…] 16/2 கச்சேரி, நல்லூர் ரோட்டு, யாழ்ப்பாணம் எஸ். சந்திரசேகரமும் பெண் வரதலட்சுமியும் வழக்காளிகளாக மூளாய் தொல்புரம் ஐக்கிய பரஸ்பரசகாய ச[…]கத்தின் தலைவர் ஏ. கே. நவர[…]தினம் முதலாம் எதிரியாகவும் தனதிகாரி பி. ஆறுமுகம் இரண்டாம் எதிரியாகவும், காரியதரிசி M, நமசிவாயம் மூன்றும் எதிரியாகவும், இரண்டாம் வழக்காளியின் காலஞ்சென்ற K, வேலாயுதர் ஓர் அங்கத்தவராகவிருந்தபடியால் அவருக்குச் சேரவேண்டிய உதவிப் பணம் ரூபா 2000/- ஷெ சங்கத்திலிருந்து அறவிட்டுக்கொள்ளும்படி வழக்குத தொடரப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஷெ சங்கத்தின் அங்கத்தவர்களும் இன்னும் மே[…]படி சங்கத்தின் தொடர்பு[…]யோர் எவராவதும் 3-4-[…] 10 மணிக்குக் கோட்டில் [...]பட்டு தங்களுக்கு ஏதாவது பி[…]தடையிருப்பின் வெளிப்படுத்[…]படி இத்தால் கட்டளையிடப்[…]கிறது.

1963-ம் ஹூ மாசி மீ" 8-ம்உ.
கோட்டுக்கட்டளைப்படி,
Sgd. G. A, V Pillainayagan
சக்கிடுத்தார்.
M. 290 29, 5-4-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதிகள் வலவிபுரம் மாணிக்கமும், ஆறுமுகம் பொன்னையாவும் இருவருஞ் சிறுப்பிட்டி —வழக்காளிகள், இல. M.B. 3664.

எதிராக

தம்பையா கந்தையா அச்செழு[…]
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B, 3664-ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963 ஹூ சித்திரை மீ" 27 உ (27-4-63) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:-முதல்வட்[…] ரூபா 1450-ம். இதற்கு ரூ[…] 1250-க்கு 29-9-60 தீர்வைதந்[…] தொடக்கம் 8-8-61வரை 100-க்[…] 4 வீத வட்டியையும், பின் மு[…] தொகையும் இறுபடும்வரைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செல[…] 183-67,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண[…] டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, […]தூர் கோயிற்பற்று "அச்செ[…] இறை "குரவெல்லைகலட்[…] பரப்புநிலலாச்சம 51 இற்லே[…] குப்புறமாகபரப்புநிலலாச்சம்[…]யும், பரப்பு நிலாச்சம் 10 […] மிகுதிப்பரப்பு நிலாச்சம் 1[…] இதில் மேற்குப்புறமாகப் பரப்[…] நில லாச்சம் மிகுதி 2¼. மி[…] பரப்பு நில லாச்சம் 12¾, இ[…] மேற்குப்புறமாக பரப்பு நி[…]சம் 2 குழி 9 9/10. இத[…] எல்லை கிழக்கு தம்பையா ரா[…] பிள்ளைக்குரிய ஆதனம், வட[…] ரோட்டு. மேற்கு தம்பையா […]தையாவுக்குரிய ஆதனம். தெ[…] கந்தையா சின்னத்தரைக்[…] ஆதனம்: இது அடங்கலும்.

சி. செ. மாரி[…]
கொம்மிசன[…]
விலைமதிப்[…]

விதானை வளவு
சித்தன்கேணி
16-3-63.
M, 291, 29-3-63,


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 29-3-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம, சிவப்பிரகாசம்.